# உலக அமைதி போற்றும் 'காஞ்சி'

சிங்கப்பூரின் குறிப்பிடத்தக்க இளம் கலைஞர்களில் ஒருவரான குமாரி லாவண்யா ரகுராமன் அண்மையில் காஞ்சிபுரத்தில் மேடையேற்றிய "காஞ்சி" நடனம் பலரது பாராட்டையும் பெற்றது.

பல்லவ மன்னர்களின் தலைநகரமாகத் திகழ்ந்த காஞ்சிபுரம் வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழர் நகரங்களில் ஒன்று. சிற்பக் கலை வளர்த்த பல்லவ மன்னர்களின் காஞ்சியில் இசை, நடனம் என்று பல்வேறு கலைகளும் செழித்து வளர்ந்தன.

கலையும் தமிழும் வளர்த்த தொன்மையான நகரமான காஞ்சிபுரம், சமயப் பீடமாகவும் பல நற்பணிகளைச் செய்து வருகிறது.

பல சிறப்புகள் மிக்க இந்தக் காஞ்சி நகரத்தைப் பற்றி உருவாக்கப்பட்ட "காஞ்சி" வர்ணத்தை காஞ்சிபுரத்திலேயே மேடையேற்றியுள்ளார் லாவண்யா.

உலகம் போற்றும் மதத் தலைவராகத் திகழ்ந்த காஞ்சி மகா பெரியவாள் ஸ்ரீ சந்திர சேகேந்திரா சரஸ்வதி சுவாமிகளின் பிறந்த நாள் அன்று "காஞ்சி" நடன நிகழ்ச்சி நடந்தது.

தமிழ்ப் பேராசிரியர் எழுதிய "காஞ்சி" வர்ணத்தில், காஞ்சியின் சிறப்போடு உலக அமைதிக்காக பாடுபட்ட பெரியவரைப் பற்றியும் கெளதம புத்தர் பற்றியும் இடம் பெற்றிருந்தது. புத்தர் பிறந்த விசாக தினத்தில் இந்த நடனம் நிகழ்ச்சி அரங்கேறியது என்பது குறிப்பிடத்தக்கது. நடனத்தை பிரபல நடனத் தம்பதிகள் தனஞ்சயனும் சாந்தா தனஞ்சயனும் வடிவமைத்தனர். நட்டுவாங்கம்- சாந்தா தனஞ்சயன், இசை - திருமதி ஆர்.வானதி.

பலரது பாராட்டுகளையும் பெற்ற, உலக அமைதியைப் போற்றும் காஞ்சி நடனத்தை உலகெங்கும் மேடையேற்றும் எண்ணம் கொண்டுள்ளார் லாவண்யா.



ஆலாபனா ஆர்ட்ஸ்

குமாரி லாவண்யா ரகுராமன்

'Tamil Murasu'
Singapore
Friday,
2ndJuly,2004